# சுற்றறிக்கை

ஏப்ரல் 2026–இல் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் வேலூர் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய பள்ளிக்கல்வித் துறையின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்கள்/ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு தேர்தல் பணி குறித்த ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவே தேர்தல் பணியின் முக்கியத்துவத்தை அறிந்து 18.04.2026 அன்று நடைபெறவுள்ள தேர்தல் பயிற்சி வகுப்பிற்கு காலை 9.00 மணிக்குள் presiding officer, Polling Officer–1 மட்டும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பயிற்சி மையங்களில் தவறாமல் கலந்து கொள்ள அனைத்து பணியாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும், தேர்தல் பணி வழங்கப்பட்ட பணியாளர்கள் பயிற்சியில் கலந்து கொள்வதை உறுதி செய்யுமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பு – தேர்தல் பயிற்சியில் பங்கு பெறாத பணியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

16-04-26

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

16/4/26

பெறுநர்,

தலைமையாசிரியர்கள்/ஆசிரியர்கள்/ஆசிரியல்லாப் பணியாளர்கள்,
உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.